*மலைப்பிரசங்கம் 07*

## *இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்*

***மத்தேயு 5:3-10, ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். 5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். 6. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். 7. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். 8. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். 9. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். 10. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.***

### *மலைப்பிரசங்கத்தின் அமைப்பு*

*இதற்கு நாம் பதிலளிக்கவேண்டுமானால் மலைப்பிரசங்கத்தின் அமைப்பை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.*

*மொத்தம் எட்டு போதனைகளை மலைப்பிரசங்கம் உள்ளடக்கியுள்ளது.*

*1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*2. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*3. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*7. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*இந்த முதல் நான்கு போதனைகளும் உடைக்கப்பட்ட, துக்கிக்கும், நீதியின் மேல் பசிதாகம் கொண்ட மென்மையான நபர்களைக் குறித்துப் போதிக்கிறது.*

*கடைசி நான்கு போதனைகளும் இரக்கமுள்ள, தங்கள் நீதியின் நிமித்தம் துன்பப்படுகிற மெய்யான சமாதானத்தை அறிவிக்கிறவர்களைக் குறித்து போதிக்கிறது.*

*அவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவைகள் வழிந்தோடுகிறது.*

## *1. நாம் யார்?*

*இருதயம் என்பது நீங்கள் யார் என்னும் உங்களுடைய எண்ணங்கள் மற்றும் உணர்வுகளின் மறைவிடம். அது யாருக்கும் தெரியாது. தேவன் மட்டுமே அதை அறிவார்.*

*கண்ணுக்கு தெரிந்து நீங்கள் செய்யும் கிரியைகள் தேவனுக்கு எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு கண்ணிற்கு புலப்படாத உங்களின் இருதயத்தின் நினைவுகளையும் தேவன் பொருட்படுத்துகிறார்.*

*1 சாமுவேல் 16:7,* ***கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரிர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்.***

***நீதிமொழிகள்*** *4:23,* ***எல்லாக் காலலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.***

*ஜீவியத்திற்கு ஏற்ற அனைத்து காரியங்களும் இருதயத்திலிருந்தே புறப்படுகிறது.*

*வாயிலிருந்து புறப்பட்டு வருகிற அனைத்தும் இருதயத்திலிருந்தே புறப்பட்டு வருகிறது.*

***மத்தேயு*** *15:18-19,* ***வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.*** *19.* ***எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்.***

***மத்தேயு*** *12:33-34,* ***மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்.*** *34.* ***விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.***

*எனவே இருதயம் என்பது இயேசுவுக்கு மிகவும் முக்கியமான ஒன்று. நாம் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதுவே நம் இருதயத்தின் ஆழத்தில் பதிந்திருக்கிற நினைவுகள். ஏதோ நம்மிடம் இருந்த சில கெட்ட பழக்கவழக்கங்களை மாற்றுவதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வரவில்லை. நம்முடைய அழுக்கான இருதயங்களை சுத்திகரிப்பதற்காகவே அவர் இந்த பூமியில் வந்தார்.*

*தாவீது இந்த கேள்வியைக் கேட்கிறார்.*

***சங்கீதம்*** *24:3,* ***யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?***

*தாவீது நமக்காக இந்த கேள்விக்கும் பதிலளிக்கிறார்.*

***சங்கீதம்*** *24:4,* ***கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.***

## *2. இருதயத்தின் சுத்தம் என்றால் என்ன?*

*இருதயம் என்று வேதம் பெரும்பாலான இடங்களில் பயன்படுத்தும்போது, நம்முடைய சரீர அவயங்களுக்கு இரத்த ஓட்டத்தை சீர்படுத்தும் உறுப்பைக் குறித்து அவர் பேசவில்லை. அது உள்ளான மனிதனைக் குறித்தே பேசுகிறது.*

- *உங்களுடைய ஆவி,*
- *உங்களுடைய ஆத்துமா,*
- *உங்களுடைய மனம்.*

***எரேமியா 17:10, கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.***

*இருதயமும் சிந்தையும் இணை அர்த்தம் கொண்ட வார்த்தைகள். எனவே இயேசு இருதயத்தைக் குறித்து பேசும்போது, அவர் உங்கள் சரீர அவயத்தைக் குறித்து பேசவில்லை; மாறாக, அவர் உங்களின் உள்ளான மனிதனைக் குறித்து பேசுகிறார்.*

*"சுத்தம்" என்பதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை "**கதரோஸ்.**" அதற்கு தூய்மை என்று அர்த்தம்.*

*நியாயப்பிரமாணத்தில், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மிருகத்தையோ அல்லது மற்ற பொருட்களாலோ ஆசாரியர்களும் இஸ்ரவேல் ஜனங்களும் தங்களை தீட்டுப்படுத்தலாகாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தீட்டான எதையொன்றையும் இஸ்ரவேல் ஜனங்கள் அனுசரித்தால், அவர்கள் தேவனை ஆராதிப்பதற்கு முன்பாக தங்களை சுத்திகரித்துக்கொள்ளுதல் வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது.*

*ஆகையால் அவர்கள் தங்கள் தேவனுடைய பார்வையில் நலமாய்த் தோன்றிய சில சுத்திகரிக்கும் முறைமைகளை கடைபிடித்தார்கள்.*

*இந்த சடங்காச்சாரங்களை கைக்கொள்ளும்படிக்கு தேவன் அவர்களுக்கு கட்டளை கொடுத்திருந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாய் இன்று நாம் செய்வதுபோல அவர்கள் அதை உண்மையாய் செய்யவில்லை.*

*இயேசு கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்த பரிசேயர்கள், தங்களை சடங்காச்சார ரீதியாய் சுத்தப்படுத்திக்கொள்ளும் அனுசாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அவர்கள் தாங்கள் பயன்படுத்திய அனைத்துப் பாத்திரங்களையும், அவ்வப்போது அவர்களின் கைகளை சுத்தப்படுத்திக்கொள்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.*

***மாற்கு 7:1-7, எருசலேமிலிருந்து வந்த பரிசேயரும், வேதபாரகரில் சிலரும் அவரிடத்தில் கூடிவந்தார்கள். 2. அப்பொழுது அவரடைய சீஷரில் சிலர் கழுவாத அசுத்த கைகளாலே போஜனம்பண்ணுகிறதை அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள். 3. ஏனெனில் பரிசேயர் முதலிய யூதர் அனைவரும் முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொண்டு, அடிக்கடி கைகழுவினாலொழியச் சாப்பிடமாட்டார்கள.; 4. கடையிலிருந்து வரும்போதும் ஸ்நானம்பண்ணாமல் சாப்பிடமாட்டார்கள். அப்படியே செம்புகளையும் கிண்ணங்களையும் செப்புக்குடங்களையும் மணைகளையும் கழுவுகிறதுமல்லாமல், வேறு அநேக ஆசாரங்களையும் கைக்கொண்டுவருவார்கள். 5. அப்பொழுது, அந்தப்***

*பரிசேயரும் வேதபாரகரும் அவரை நோக்கி: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி, ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள் என்று கேட்டார்கள். 6. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும், 7. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிறபிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்.*

*இங்கே இயேசு என்ன சொல்லுகிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?*

*அவர்கள் தங்கள் வெளிப்பிரகாரமான சுத்தத்தை வைத்து சடங்காச்சார ரீதியாய் செயல்படுகிறார்கள் என்று இயேசு அவர்களைக் குற்றப்படுத்துகிறார். வெளிப்பிரகாரமான சுத்தத்தைக் குறித்து அவர்கள் அதிக ஆர்வம் காண்பிக்கிறார்கள்.*

*வெளிப்புறமான சுத்தத்தைக்குறித்து நாம் முக்கியத்துவம் கொடுப்பவர்களாய் இருக்கக்கூடாது. இருதயத்தின் சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.*

*இது மார்க்க ரீதியான சிந்தைக்கு முரணாய் தோன்றுகிறது.*

***மத்தேயு** 5:8, **இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;***

*அவர்களின் உள்ளான இருதயத்தின் சுத்திகரிப்பைக் குறித்தே இயேசு வலியுறுத்துகிறார்.*

*அது புதியது அல்ல!*

*தேவன் எப்போதுமே நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறவராயிருக்கிறார்.*

***எரேமியா** 17:10, **கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.***

*நான் உங்களின் வெளிப்பிரகாரமான சரீர அழகைக் குறித்து அல்ல, உங்களுடைய இருதயத்தையும் சிந்தையையும் பொருட்படுத்துகிறேன் என்று தேவன் சொல்லுகிறார்.*

## *3. சுத்தமான இருதயத்தை பெற்றுக்கொள்வது என்றால் என்ன?*

*தேவனுடைய சித்தத்தை செயல்படுத்தும் ஒற்றைச் சிந்தனையுடன் வாழ்வதாகும்.*

*தேவன் பரிசுத்தர் என்பதை தன்னுடைய ஜனங்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். எனவே அவர் வகுத்து வைத்த அந்த வரையறைக்கு ஏற்றவாறு தன்னுடைய ஜனங்களும் வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

***யாத்திராகமம்** 31:13, **நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்.***

*லேவியராகமம் 10:3, அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி: என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான்*

*மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.*

***லேவியராகமம் 11:44-45, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக. 45. நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக.***

*சுத்தத்திற்கும் அசுத்தத்திற்குமான வித்தியாசங்களின் அடிப்படையில் தன்னை தேவனென்று தன் ஜனம் அறியவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவன் நியாயப்பிரமாணங்களை ஏற்படுத்துகிறார். அதன்படி வாழுவதற்கு மக்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.*

***மத்தேயு 4:4, அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.***

*தேவன் செய்கிற எல்லாவற்றையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல; அவற்றிற்கு நாம் முழுமையான கீழ்ப்படிதலை காண்பிப்பதற்காகவே அனுமதிக்கப்படுகிறது. நியாயப்பிரமாணத்தைக் குறித்து மோசே வலியுறுத்தும் தருணம் மிக முக்கியமான ஒன்று.*

***உபாகமம் 29:9, மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.***

*ஆரம்பத்திலிருந்தே வெளியரங்கமான நியாயப்பிரமாண விதிமுறைகள் அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இருதயத்தின் நினைவுகள் தேவனுக்குப் பிரியமானதாயிருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

***உபாகமம் 10:16, ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம்பண்ணுங்கள்.***

***1 சாமுவேல் 15:22, அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்.***

*விதிமுறைகளைப் பின்பற்றி இருதயத்தின் நினைவுகளை மறப்பது எளிது. மற்றவர்கள் பார்க்கிற காரியங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நாம் அதிக ஆர்வம் காண்பிக்கிறோம். ஆனால் தேவன் மட்டுமே பார்க்கக்கூடிய காரியங்களை நாம் பொருட்படுத்துவதில்லை. என்னுடைய கை அழுக்காயிருந்தால், யாரும் என்னோடு கைகுலுக்க மாட்டார்கள். ஆகையால் அவற்றை நான் சுத்தமாக வைத்துக்கொள்வது நல்லது.*

*இன்று காலை நான் ஒரு அழுக்குச் சட்டையை அணிந்துகொண்டால், நான் என்ன சொல்லுகிறேன் என்பதை நீங்கள் கவனிக்கமாட்டீர்கள், என் சட்டையையே*

*பார்த்துக்கொண்டிருப்பீர்கள். மனிதனுக்கு முன்பாக தங்களை நலமாய் காண்பித்துக்கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆனால் தேவனுக்கு முன்பாக உத்தமமாய் நடப்பதற்கு நாம் பிரியப்படுவதில்லை.*

*எனவே தான் மற்றெல்லோரைக்காட்டிலும் தங்களை அதிக நீதிமான்களாய் எண்ணிக்கொண்டிருந்த பரிசேயரையும் வேதபாரகரையும் இயேசுகிறிஸ்து வன்மையாகக் கண்டிக்கிறார். அவர்கள் தங்களுடைய வெளிப்புற அலங்காரத்தை சுத்தமாய் வைத்துக்கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஆனால், தேவனோடு அவர்களுக்கிருந்த உறவை அவர்கள் ஒரு பொருட்டாய் எண்ணவில்லை. இயேசு அவர்களுக்குச் சொல்லுகிறார்:*

*முற்றிலும் தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழுவதே சுத்த இருதயத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வழி என்று கூறுகிறார்.*

***1 நாளாகமம் 28:9, என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.***

***சங்கீதம் 139:23-24, தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். 24. வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.***

*ஆகவே சுத்த இருதயம் என்பது தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழுவதேயாகும்.*

### *தேவனால் என்ன செய்ய முடியும்? என்ன செய்யமுடியாது?*

*மனிதன் சில நியாயப்பிரமாண விதிகளை விளைவுகள் இல்லாமல் மீற முடியாது. அனால் தேவனால் முடியும்.*

*உதாரணத்திற்கு, உங்கள் கையை தீயில் வைத்தால், அதில் காயம் ஏற்படுவது இயற்கை. அதுவே வெப்ப இயக்கவியல் விதி. அதேபோன்று ஐயாயிரம்பேரை போஷிக்க அநேக உணவு தேவையாயிருக்கிறது. ஆனால் தேவனால் இந்த விதியைத் தகர்க்கமுடியும்.*

- *தேவனால் தன்னுடைய ஜனங்களை தீயினூடாய் நடக்கப்பண்ணி, அவர்களின் வஸ்திரம் பொசுங்காமல் செய்யமுடியும்.*
- *ஐந்து அப்பத்தை வைத்துக்கொண்டே ஐயாயிரம்பேரை அவரால் போஷிக்கமுடியும்.*

*இதை நாம் அற்புதங்கள் என்று அழைக்கிறோம். நடக்கிற ஏதோ ஒன்றை இயற்கை விதிகளைக் கொண்டு விவரிக்கமுடியாததையே "அற்புதம்" என்ற வார்த்தை குறிக்கிறது.*

*அதேபோன்று, மனிதன் எளிதாய் தகர்க்கிற சில ஒழுக்க ரீதியான விதிமுறைகளை தேவனால் மீற முடியாது.*

***என்னால் செய்ய முடிந்த, தேவனால் செய்ய முடியாத காரியங்கள் சிலவைகள் உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?***

- *என்னால் பொய் சொல்லமுடியும்.*
- *என்னால் விபச்சாரம் செய்ய முடியும்.*
- *என்னால் ஏமாற்றமுடியும்.*
- *என்னால் திருட முடியும்.*

*ஆனால் இதுபோன்ற விதிமுறைகளை தேவனால் மீற முடியாது. அதை மீறியவர்களையும் அவர் விடுவதில்லை.*

*இயற்கை விதிகளைப் பின்பற்றுவதில் நாம் மிகவும் கவனமாய் செயல்படுகிறோம். ஏனென்றால் அதற்கு உடனடியான பின்விளைவுகள் நேரிடும். ஆனால் அதைக்காட்டிலும் அதிகப்படியான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒழுக்கநெறி சார்ந்த விதிமுறைகளை நாம் பொருட்படுத்துவதில்லை. தேவனுடைய ஒழுக்கம் சார்ந்த விதிமுறைகளைக் கடைபிடிப்பதே இருதயத்தின் சுத்தம்.*

*எனவே முதலாவது, தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்து அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வதே இருதயத்தின் சுத்தம் எனப்படுகிறது.*

*இரண்டாவது, தேவனுக்கு நம்முடைய இருயத்தை பூரணமாய் அர்ப்பணித்து, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே சுத்த இருயதம். அதாவது, நம்முடைய வாழ்க்கையில் எதைச் செய்தாலும் அதை தேவனுடைய நாமத்தின் மகிமைக்காய் செய்ய வேண்டும் என்ற ஒற்றைச் சிந்தனை அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டும்.*

*1 கொரிந்தியர் 10:31,* ***ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.***

*இந்த இடத்தில் "சுத்தம்" என்பது கலப்படமில்லாத என்று பொருள்கொள்கிறது.*

*விபச்சாரம் என்றால் என்ன?*

*விபச்சாரம் என்றால் பெரும்பாலும் மாம்ச ரீதியான அர்த்தத்தையையே நாம் புரிந்துகொள்ள முற்படுகிறோம். திருமண உடன்படிக்கைக்கு அப்பாற்பட்டு கொள்ளும் உடலுறவையே நாம் அவ்வாறு குறிப்பிடுகிறோம்.*

*வேதாகமம் இந்த வகையான விபச்சாரத்தை தெளிவாய் குறிப்பிட்டு, வன்மையாய் கண்டிக்கிறது.*

*ஆனால் இந்த சரீரப்பிரகாரமான விபச்சாரத்தையும் கடந்து ஆவிக்குரிய விபச்சாரத்தையும் குறித்து வேதம் குறிப்பிடுகிறது.*

*ஓசியா புத்தகம் முழுமையும், தேவ ஜனத்தின் ஆவிக்குரிய விபச்சாரத்தைக் குறித்துப் பேசுகிறது.*

*தேவ ஜனத்தின் ஆவிக்குரிய விபச்சாரத்தைக் குறித்து பழைய ஏற்பாட்டில் அநேக காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*எசேக்கியேல் 16 மற்றும் 22.*

*புதிய ஏற்பாட்டில் தேவனுக்கும் உலகத்திற்கும் நீங்கள் ஒரே நேரத்தில் ஆராதனை செய்ய முடியாது என்று இயேசு போதிக்கிறார். தேவனால் உண்டாகாத எதின் மீதும் நம்முடைய இருதயத்தைச் செலுத்தினால், நாம் ஆவிக்குரிய விபச்சாரத்தில் ஈடுபடுகிறோம் என்று அர்த்தம்.*

***யாக்கோபு 4:4,8, விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். 8. தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.***

*பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் தேவனை நேசிக்கும்படிக்கு நமக்கு அறிவுறுத்துகிறது.*

***மத்தேயு 22:37-38, இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; 38. இது முதலாம் பிரதான கற்பனை.***

***உபாகமம் 6:4-5, இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். 5. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக.***

*இதுவே ஆவிக்குரிய பார்வையில் சுத்த இருதயம்.*

### *4. நாம் சுத்த இருதயத்தைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு?*

*தேவனுக்கு பூரணமாய் அர்ப்பணிக்கப்பட்ட இருதயம்.*

*முதலாவது, ஒழுக்க ரீதியாய் களங்கமில்லாததும், தேவனுக்கு பூரணமாய் அர்ப்பணிக்கப்பட்டதுமான இருதயத்தை நாம் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லாத ஒன்று.*

***ஆதியாகமம் 6:5, மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,***

***எரேமியா 13:23, எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்.***

*பூரணமாய் சுத்தமாக்கப்பட்ட இருதயத்தை சுதந்தரிப்பது சாத்தியமில்லை என்றாலும் தேவனுடைய கிருபையினால் அதை அடைவது சாத்தியம். மனிதனால் கூடாதது தேவனால் கூடும்.*

*சுத்த இருதயம் என்பது தேவன் கொடுக்கும் பரிசு. அது மறுபிறப்பினாலும் ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுவதினாலும் சாத்தியமாகிறது.*

***எரேமியா 31:33, அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள்***

***உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.***

***எரேமியா 32:39, அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும் படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு,***

***2 கொரிந்தியர் 5:17, இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.***

*நம்முடைய இருதயத்தின் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதற்கு சில வழிகள் உண்டு. அவற்றுள் தேவனுடைய வார்த்தையோடு நேரம் செலவழிப்பதே மிகவும் பிரதானமானது.*

***சங்கீதம் 119:9, வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே.***

***சங்கீதம் 119:11, நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.***

*இருதயத்தை சுத்தமாய் வைத்துக்கொள்வதற்கான இரண்டாவது வழி, தேவ ஜனத்தோடு ஐக்கியத்தை வளர்த்துக்கொள்ளுதல். அது ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க அது உதவும்.*

***பிரசங்கி 4:9-10, ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். 10. ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே.***

*எனவே தான் எபிரெயர் நிருபத்தின் ஆசிரியர் நமக்கு அறிவுறுத்துகிறார்.*

***எபிரெயர் 10:24, மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;***

*மூன்றாவது, தேவனுடைய ஊழியத்தைச் செய்வதின் மூலம் நம்முடைய இருதயத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ள முடியும். தேவனுடைய ஊழியத்தில் நாம் ஈடுபடும்போது, தேவன் நம்மை மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காய் எடுத்து பயன்படுத்துவார். அவ்வாறு செய்யும்போது நம்முடைய அர்ப்பணிப்பில் வளருவதற்கும் நம்முடைய இருதயத்தை சுத்தமாய் வைத்துக்கொள்வதற்கும் வழிவகுக்கும்.*

## *5. தேவனைப் பார்ப்பது என்றால் என்ன?*

*அ) அவருடைய சமுகத்தில் நிற்பது.*

*தேவனைப் பார்ப்பது என்றால் அவருடைய முகத்திற்கு முன்பாக நிற்பது என்று பொருள். எகிப்தின் மீது வரவழைக்கப்பட்ட காரிருள் என்னும் வாதையைத் தொடர்ந்து, பார்வோன் மோசேயை இந்த வார்த்தைகளைக் கொண்டு எச்சரிக்கிறான்.*

***யாத்திராகமம் 10:28-29, பார்வோன் அவனை நோக்கி: என்னை விட்டு அப்பாலே போ; நீ இனி என் முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு; நீ இனி என் முகத்தைக் காணும் நாளில் சாவாய் என்றான். 29. அப்பொழுது மோசே: நீர் சொன்னது சரி; இனி நான் உம்முடைய முகத்தைக் காண்பதில்லை என்றான்.***

*“நீ இனி என் முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு” என்று ராஜா சொல்லும்போது, நான் என் சமுகத்தில் வருவதற்கு இனி உனக்கு அனுமதி கொடுக்கமாட்டேன் என்று பொருள்.*

*அதேபோன்று, நாம் மருத்துவரைத் தொடர்புகொண்டு, “இன்று மருத்துவரை சந்திக்கலாமா?” என்று கேட்கிறோம். அவரை தூரத்திலிருந்து பார்த்துவிட்டு போவதற்காய் நாம் அனுமதி கேட்கவில்லை. அல்லது அவருடைய உருவப் படத்தைப் பார்ப்பதற்கு கேட்கவில்லை.*

*அவரை நேரில் சந்தித்து அவருடைய அருகாமையில் செல்லுவதற்கே அனுமதி கேட்கிறோம்.*

*தேவனைப் பார்ப்பது என்றால் அவருடைய சமுகத்தில் இருப்பது என்று அர்த்தம்.*

***ஆ) ஆச்சரியமான அவருடைய மகிமை***

*தேவனை சந்திப்பது என்பது, அவருடைய பரிசுத்தத்தை நேரடியாய் அனுபவித்து, அவருடைய மகிமையை நேரடியாய் சாட்சியிடுவது என்று பொருள்.*

*தேவன் யோபுவை எதிர்கொண்டபோது,*

***யோபு 42:5-6, என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. 6. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்.***

*இந்த உலகத்தில் நம்முடைய ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தும் தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும் தேவனுடைய தெய்வீக பாதுகாப்பின் மூலம் நமக்குக் கொடுக்கப்படுகிறது. நாம் அவருடைய மகிமையின் சாயலையும் பிரதிபலிப்பையும் பார்க்கிறோம். அவருடைய சத்தத்தின் எதிரொலியையும் அதிர்வையும் நாம் கேட்கிறோம். ஆனால் தேவனே நம்மோடு வந்து தங்கியிருக்கும் நாள் ஒன்று வருகிறது. அவருடைய மகிமையை மின்னல்கள், மலைகள், கடல், நட்சத்திரக்கூட்டம் ஆகிவற்றில் இனி நாம் பார்க்கவேண்டிய அவசியம் இருக்காது. அதற்கு பதிலாக, அவரை நாம் நேரில் சந்திக்கப்போகிறோம்.*

*அவருடைய மகிமையை எளிதாய் நகர்த்தலாம் (வெளிப்படுத்தல் 21:23). அவருடைய பரிசுத்தத்தை தேனைப் போல் நம் நாவினால் சுவைக்க முடியும்.*

*ஆகையால் தேவனை சந்திப்பது என்பது அவருடைய சமுகத்தில் இருப்பது மட்டுமன்று; அவருடைய மகிமையின் அனுபவத்தை நேரில் பெற்றுக்கொண்டு ஆச்சரியமடைவதும் அதில் உள்ளடங்கும்.*

***இ) அவருடைய கிருபையினால் தேற்றப்படுதல்***

*தேவனை சந்திப்பது என்றால் அவருடைய கிருபையினால் தேற்றப்படவது என்பதும் பொருள். தேவனுடைய முகத்தை தனக்கு மறைக்கவேண்டாம் என்று சங்கீதக்காரன் தன்னுடைய சங்கீதங்களில் அடிக்கடி சொல்லுவதை நாம் பார்க்கமுடியும்.*

***சங்கீதம் 27:7-9, கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும். 8. என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று. 9. உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும்; நீரே எனக்குச் சகாயர்; என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும்.***

*“உமது முகத்தை எனக்கு மறையாதேயும்” என்ற விண்ணப்பமே “என் மேல் கிருபையாயிரும்” என்ற விண்ணப்பமாகும். அதாவது, தேவனுடைய முகத்தைத் தேடுவது என்பது இனிமையான மற்றும் ஆறுதலான ஒரு அனுபவமாகும். தேவன் தன்னுடைய முகத்தைக் காண்பித்தாராகில், நாம் கிருபை பெற்றோம். அவர் தன்னுடைய முகத்தை மறைத்தால், நாம் ஆச்சரியப்படுவோம்.*

*தேவனை தரிசிக்கும்படியாக நமக்கு வாக்குப்பண்ணுகிற இயேசுவின் இந்த வாக்குறுதியில் மூன்று காரியங்கள் உள்ளடங்கும்.*

- *நாம் காத்திருக்கவேண்டியதில்லை, நேராக தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிப்போம்.*
- *அவருடைய நேரடியான மகிமையின் பிரசன்னத்தை சாட்சியிட்டு ஆச்சரியப்படுவோம்.*
- *அவருடைய கிருபையினாலே தேற்றப்படுவோம்.*

*நாம் சுத்த இருதயமுள்ளவர்களாயிருந்தால் இவைகளின் பகுதியை தற்போதே ருசிபார்ப்போம். எதிர்காலத்தில் அவற்றை முழுவதுமாய் அனுபவிப்போம்.*

***இந்த வாழ்க்கையில் எதைப் பெறுவோம்?***

*கிறிஸ்தவ ஆசீர்வாதங்கள் என்பது வெறும் எட்டா கனியல்ல. அது என் கையில் இருக்கும் கனி. நாம் சுத்த இருதயத்தோடு, தேவனுக்கு பிரியமான, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வோமாகில், நாம் தேவனுடைய பிரசன்னத்தை தற்போதே உணரமுடியும்.*

***1 பேதுரு 1:3-4, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; 4. அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.***

***1 பேதுரு 1:8, அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து,***

***சங்கீதம் 36:7-9, தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள். 8. உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். 9. ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்.***

*தேவனை அறிவதும் நம்முடைய அன்றாட வாழ்வில் தேவனுடைய பிரசன்னத்தை உணர்வதும் அவருடைய மகிமைக்காய் வாழ்வதுமே கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகச் சிறந்த ஆசீர்வாதமும் நேர்மையான இலக்குமாகும்.*

*நம்முடைய வாழ்க்கையில் இந்த இலக்கை நாம் வைத்திருப்போமாகில், தேவனை மகிழ்விக்கக்கூடிய அனுதின வாழ்க்கை, ஆசீர்வாதங்கள், மற்றும் மகிழ்ச்சி ஆகியவைகள் குறைவுபடாமல், நாம் தேவனை முகமுகமாய் தரிசிக்கும் வரையிலும் நம்மோடு நிலைத்திருக்கும். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."*

## *முடிவுரை:*

*ஒரு ஓட்டப்பந்தய வீரர் பார்ப்பதற்கு மிகவும் ஈர்க்கக்கூடியவராயிருந்தார். அழகான வஸ்திரம், பொன்னிற காலணிகள் என்று ஜொலிக்கக்கூடிய வகையில் காட்சியளித்தார். அவர் ஓடுவதற்கான பாதையில் நிற்கும்போது, அதற்கு தன்னை முழுமையாய் தயார்படுத்துக்கொள்ளும் முயற்சியில் நேர்த்தியான பயிற்சிகளையும் மேற்கொண்டார். இந்த நபரின் ஓட்டத்தைப் பார்க்கும் ஆர்வம் அனைவரிடமும் தொற்றிக்கொண்டது. அவர் நிச்சயம் நன்றாக ஓடுவார் என்ற எண்ணம் அனைவருக்கும் இருந்தது. ஓடுவதற்கான துப்பாக்கி ஒலி ஒலித்தவுடன், அவரின் ஓட்டத்தைக் கண்ட அனைவரும் தங்கள் சிரிப்பை கட்டுப்படுத்தமுடியாமல் சிரித்தேவிட்டனர். அதற்குக் காரணம், அந்த ஈர்க்கக்கூடிய ஓட்டப்பந்தய வீரர் தான் எல்லோருக்கும் பின்னாக ஓடிக்கொண்டிருந்தார். அவர் பார்ப்பதற்கு நன்றாக இருந்தார். ஆனால் அவருடைய செயல் நன்றாக இல்லை.*

*பார்வைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சமுதாயத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.*

*நீங்கள் எவ்வளவு நல்லவர் என்பதோ, எவ்வளவு அழகாய் இருக்கிறீர்கள் என்பதோ பொருட்டல்ல.*

*நம்முடைய திருச்சபையில், பார்வைக்கு எது நலமாய் தோன்றுகிறதோ அதையே நாம் தேர்வுசெய்கிறோம்.*

*பூமியிலுள்ள திருச்சபையில் பார்வைக்கு நலமாய் தோன்றுகிறவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கலாம். ஆனால் தேவனுடைய இராஜ்யத்தில் அப்படியல்ல. நபரின் மதிப்பே அங்ஙனம் பொருட்படுத்தப்படுகிறது. அதுவே இருதயம்.*

***சங்கீதம் 139:23-24, தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். 24. வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.***